பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண் : 64 நாள்: 04.05.2019

## பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை பகுப்பாய்வு கூடத்தின் செயல்பாடுகள் குறித்து ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு!

= = = =

பெருநகர சென்னை மாநகராட்சியில் 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 24மணி நேரகால 19 தாய்சேய் நல மையங்கள், 5 பகுப்பாய்வு கூடங்கள், 2 போதை மறுவாழ்வு மையங்கள், தொற்று நோய் மருத்துவமனை மற்றும் பயிற்சி மையம் ஆகியவற்றின் மூலம் சிறந்த முறையில் மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், கோட்டம்–113 நுங்கம்பாக்கம் பகுப்பாய்வுக்கூடத்தில் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (04.05.2019) திடீர் ஆய்வு மேற்கொண்டு, பகுப்பாய்வுக் கூடத்தில் இயங்கிவரும் பொது ஆய்வுக்கூடம், இரத்த சுத்திகரிப்பு மையத்தில் உள்ள இயந்திரங்கள், அல்ட்ராசோனிக், இ.சி.ஜி. மற்றும் எக்ஸ்–ரே கருவிகளின் செயல்பாடுகள் குறித்து மருத்துவ அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இப்பகுப்பாய்வுக் கூடத்தில் உள்ள இரத்த சுத்திகரிப்பு நிலையத்தில் 13 இயந்திரங்களுடன் தினமும் 23 நோயாளிகளுக்கு இரத்த சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. மேலும், இங்கு 63 பதிவு பெற்ற நோயாளிகள் மாதந்தோறும் பயன்பெற்று வருகின்றனர். இம்மையத்தின் மூலம் மொத்தம் 17491 நோயாளிகள் இதுவரை பயனடைந்துள்ளனர். இப்பகுப்பாய்வு கூடத்திலுள்ள இரத்த சுத்திகரிப்பு மையத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து Tanker Foundation என்ற தொண்டு நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

பின்னர், மாநகராட்சி மருத்துவ அலுவலர்களிடம், வளர்ந்து வரும் தேவைக்கேற்ப இரத்த சுத்திகரிப்பு நிலையங்களை விரிவுபடுத்தவும், தேவையான கருவிகள் மற்றும் வசதிகளை மேம்படுத்தவும், பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் இரத்த சுத்திகரிப்பு மையங்களை தேவை அடிப்படையில் ஏற்படுத்தவும், ஆணையாளர் அவர்கள் உத்தரவிட்டார். மேலும், பகுப்பாய்வு கூடத்தில் செய்யப்படும் சேவைகளை ஆய்வு செய்து Thyroid profile, Renal profile, cancer markers போன்ற பரிசோதனைகளின் எண்ணிக்கைகளை மேம்படுத்தவும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், மாநகர நல அலுவலர் டாக்டர் என்.ஏ.செந்தில்நாதன், மண்டல அலுவலர் திருமதி எஸ்.அனிதா, கூடுதல் மாநகர நல அலுவலர்கள், மண்டல நல அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்
பெருநகர சென்னை மாநகராட்சி**